Registered as a News Paper

பக்கங்கள் 04 விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி·07 ( 20 - 05 - 1992 ) புதன்கிழமை ஓசை: 92

## ஐம்பது வீதமானோர் அசுத்த நீர் பருகுகின்றனர்

இலங்கை மக்களில் சுமார் 50 வீதமான மக்கள் அசுத்தமான நீரையே பருகுவதாக சுகாதார அமைப்பும், இலங்கை புவியியல் பீடமும் மேற்கொண்டுள்ள ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது. இவ்வாறு அசுத்த நீரைப் பருகுவதினால் அநேகர் வயிற்று நோய்களுக்கு உள்ளாவதாகவும் இவ் ஆய்வில் இருந்து தெரியவந்துள்ளது. மேலும் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதை தடுத்து நிறுத்த வேண்டுமெனவும் இதற்கென விரிவான வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப் படுகிறது. தண்ணீரை கொதிக்க வைத்து பருகுவதன் மூலம் நோய் ஆபத்தை தடுக்க முடியும் எனவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# பேச்சுவார்த்தைக்கான கதவுகள் எப்பொழுதும் திறந்திருக்கவேண்டும்

## புலிகளை தடைசெய்வது புத்தியல்ல அரசு சார்பு பத்திரிகை அறிவுறுத்து

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான கதவுகளை சிறிலங்கா அரசு எப்பொழுதும் திறந்து வைத்திருக்கவேண்டும் என்றும், இந்தியாவைப் பின்பற்றி சிறிலங்காவும் விடுதலைப் புலிகளை தடைசெய்தால் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதில் சிக்கல் ஏற்படுமென்றும் பிரேமதாசா அரசின் குரலெனக் கருதப்படும் 'டெய்லி நியூஸ்' பத்திரிகை தனது ஆசிரியத் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

"இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளதை அடுத்து ஒரு முக்கிய கேள்வி எழுந்துள்ளது. அதாவது சிறிலங்காவும் புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென புதுடில்லி எதிர்பார்க்குமா என்பதுதான் இந்தக் கேள்வி. விடுதலைப்புலிகளுக்கு எதிராக சிறிலங்காவின் ஆயுதப் படைகள் தொடர்ச்சியான உக்கிரமான யுத்தத்தை நடத்தி வருகிறது என்பதை வேறு எந்த நாடுகளையும் விட இந்தியா நன்கறியும். இந்தியாவிற்குத்தான் எமது கள நிலைமை பற்றிய சிறந்த அறிவும் அனுபவமும் உண்டு.

கொழும்பு அரசு விடுதலைப் புலிகளை தடைசெய்வது என்பது வெளிப் பூச்சான ஒரு நடவடிக்கையாகவே இருக்கும் இது விடுதலைப் புலிகளை மாயமாக மறையச் செய்யும் ஒரு மந்திரக்கோல் அல்ல. ஆயினும் இந்தநடவடிக்கையானது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதாயின் ஒரு பிரச்சினையை உருவாக்கிவிடும். பெரும் இரத்தக் களரி ஏற்படாமல் இந்த நெருக்கடிக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்பதையே எம்மைப்போல இந்தியாவும் விரும்பும் என்பது திண்ணம். எனவே விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கான கதவுகளை நாம் எப்பொழுதும் திறந்து வைத்திருக்க வேண்டும்'' என்று இந்த ஆசிரிய தலையங்கத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளை தடை செய்தால் எதிர்காலத்தில் இந்திய நலன்கள் பாதிக்கப் படலாமென்றும், பிரேமதாசா மீதான பிடியை இந்தியா இழக்கக் கூடுமென்றும் திருடிசசிட் அண்மையில் வெளி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நாடு திரும்பும் அகதிகளை தங்கவைப்பதில் பிரச்சினை

(கொழும்பு)

தமிழ் அகதிகள் அதிகமானோர் தென்னிந்தியாவிலிருந்து நாடுதிரும்புவதால் அனைவரையும் அகதி முகாம்களில் தங்கவைப்பது ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருவதாகப் புனர்வாழ்வு புனரமைப்புத்துறை அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த சில மாதங்களாகத் தென்னிந்தியாவிலிருந்து வந்த அகதிகள் வவுனியா, தாண்டிக்குளம், வேப்பங்குளம், மன்னார் ஆகிய இடங்களிலுள்ள அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர்.

முகாம்களிலுள்ள ஒரு தொகுதி அகதிகளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியபகுதிகளிலுள்ள அவரவர்கள் வதிவிடங்களுக்கு அனுப்பிவைக்கப் புனர்வாழ்வு புனரமைப்புத்துறை அமைச்சு அதிகாரிகள் முயற்சிசெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விமான மூலம் வந்தோர் மடு அகதி முகாமில் தஞ்சம்

[மன்னார்]

இந்தியாவிலிருந்து விமான மூலம் திருக்கோணமலைக்குக் கொண்டு வரப்பட்ட மன்னார் மாவட்ட அகதிகள் மடு அகதி முகாமிற்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் திருக்கோணமலையிலிருந்து வவுனியாவிற்கு கொண்டுவந்து விடப்பட்டதால் அங்கிருந்து லொறிகள் மூலம் மடு முகாமிற்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் மடுவிறகு வந்து சேர்ந்த போதிலும் இதுவரை இவர்களை எந்த நிறுவனமும் பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை என தெரியவருகிறது.

## நியமனம் வழங்குவதில் இனவிகிதம் புறக்கணிப்பு

(கொழும்பு)

கணக்காய்வு அத்தியட்சகர் தெரிவில் இனவிகிதாசாரம் ...

...களுக்கும், 8 முஸ்லிம்களுக்கும் கணக்காய்வு அத்தியட்சர் நியமனம் வழங்கப்படல் வேண்

## இந்தியாவில் புலிகள் மீதான தடை:

## சிறிலங்கா அரசு நிலைமையை உன்னிப்பாக அவதானிக்கிறது

- பிரட்மன்

புலிகள் மீதான இந்தியாவின் தடை விதிப்பினால் ஏற்படக் கூடிய சாதக பாதகமான விளைவுகளை அரசாங்கம் வெகு உன்னிப்பாக அவ

இத் தீர்மானம் தொடர்பாக ஏற்பட்ட நிலைவரங்கள் குறித்து கருத்து தெரிவிக்கையில், இந்தியா வினசல் இவ் இயக்கம் தடை செய்யப்பட்ட

நடவடிக்கை எடுக்கப்படா விட்டால் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே

## வீரச்சாவு

### 2-ம்லெப்.புஸ்பமாறன் வீரவேங்கை யோகிதகுமார்

மட்டக்களப்பு மயிலம்பாவெளியில் விடுதலைப் புலிகள் இருவருக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும்இடையே திடீர் மோதல் ஒன்று ஏற்பட்டது.

கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற இம்மோதலில்அவ்விரு வேங்கைகளும் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

2 ஆம் லெப்டினன்ட் புஸ்பமாறன் [குணா-சின்னத்துரை சந்திரன் வாழைச்சேனை], வீரவேங்கை யோகிதகுமார் [பிரபு - கந்தப்போடி மாணிக்கவாசகம் மயிலம்பாவெளி) ஆகிய இரு வீரவேங்கைகளுமே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவராவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைதெரிவித்துக்கொள்கின்றனர்.

★ ★ ★

### வீரவேங்கை அருள்மணி

மட்டக்களப்பு மாவட்டம் குருமண்வெளியில் உழவு இயந்திரங்கள் துவிச்சக்கர வண்டிகள் சகிதம் இராணுவத்தினரதும் தேச விரோதிகளினதும் சுற்றி வளைப்பினை அடுத்து வீரவேங்கை அருள்மணி [தங்கத்துரை பிரேமச்சந்திரன். பொத்துவில்]சயனைட்அருந்தி வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறு பிற்பகல் 2.00 மணியளவில் இடம்பெற்றது. வீரவேங்கை அருள்மணிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ராஜீவ் கொலை வழக்கு பொன்வேலி நீதிமன்றில்

ராஜீவ்காந்தி கொலைவழக்கு தொடர்பான விசாரணைகள் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருக்கும் சென்னையின் புறநகர்ப் பகுதியிலுள்ள

...காப்புடன் கூடிய சிறைச்சாலைக்கு அருகில் மேற்படி நீதிமன்றத்திலேயே தடாசட்டத்தின் கீழும், மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகளுக்காகவும்

(கொழும்பு)

கணக்காய்வு அத்தியட்சகர் தெரிவில் இனவிகிதாசாரம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1991 இல் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின்படி 80 சிங்களவர்களுக்கும், 14 இலங்கைத் தமிழர்களுக்கும், 5 இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கும், 8 முஸ்லிம்களுக்கும் கணக்காய்வு அத்தியட்சர் நியமனம் வழங்கப்படல் வேண்டும். ஆனால் இப் பரீட்சையில் 105 சிங்களவர்களும், 2 தமிழர்களும் இந்த நியமனத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கிராமசேவையாளர் தெரிவு 7-ம் திகதி போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கிராமசேவகர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை அடுத்த மாதம் 7ஆம் திகதி நடாத்தப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது எனினும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் எதுவும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. யாழ். அரசாங்க அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக நேற்று அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

நாடு முழுவதும் நடாத்தப் படஇருக்கும் இப்போட்டிப் பரீட்சை இம்மாதம் 25 ஆம் திகதி நடாத்தப் படுவதற்கு முன்னர் தீர்மானிக்கப் பட்டிருந்தது பின்னர் இப்பரீசை காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (௧)

## மன்னாரில் காலரா; இரு குழந்தைகள் பலி

(மன்னார்)

மன்னார் தீவில் காலரா நோய் மிகத் தீவிரமாக பரவத் தொடங்கியுள்ளது இந்நோய் பீடிப்பால் நூற்றுக் கணக்கானோர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளனர் இந்நோயால் பேசாலையில் இரு குழந்தைகள் இறந்துள்ளனர்.

அத்துடன் வாந்தி பேதியும் மிகத்தீவிரமாகவே உள்ளதாகவும் அதிகமாக இந் நோயினால் குழந்தைகளே பாதிக்கப்பட்டுளளதாகவும் மன்னார் ஆதார வைத்தியசாலையில் அதிகமான குழந்தைப் பிள்ளைகள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதே வேளை அகதி முகாமிலுள்ள 90 வீதமான தமிழ் மக்கள் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

பேசாலை அகதி முகாம் தவிர மன்னார் தீவின் ஏனைய பகுதிகளிலும் வாந்தி பேதி நோய் பரவியுள்ளது. பெருமளவு மூஸ்லிம்களும் இந்நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மருத்துவ மனையில் முஸ்லிம்களுக்கு சிகிச்சை அளிப்பதில் காட்டும் அக்கறை தமிழர்களுக்கு காட்டப்படவில்லை என்றும் அதனாலேயே இரு குழந்தைகள் உயிரிழந்தனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன,

[4 ஆம் பக்கம் பார்க்க]

படக் கூடிய சாதக பாதகமான விளைவுகளை அரசாங்கம் வெகு உன்னிப்பாக அவதானித்து வருகிறது ஆனால் இது தொடர்பாக எந்த விதமான தீர்மானத்தையும் அரசாங்கம் இன்னும் எடுக்கவில்லை என சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்று முன் தினம் தெரிவித்தார்.

குறித்து கருத்து தெரிவிக்கையில், இந்தியாவினசல் இவ்வியக்கம் தடை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து இங்கும் இதனைத் தடைசெய்ய வேண்டும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்கா அரசாங்கத்தை கோரியுள்ளார்.

இலங்கையிலும் புலிகளைத் தடை செய்ய ஏக காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவே அர்த்தப்படும் எனவே அரசாங்கம் புலிகள் இயக்கம் தடை செய்யப்படுமா இல்லையா என்பதை திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும் என்றும் அனுரா பண்டார நாயக்கா கோரியுள்ளதை சுட்டிக்காட்டினார்.

# யுனிசெவ் அதிகாரிகள் மன்னார் செல்லத் தடை

யுனிசெவ் அதிகாரிகள் குழு வட பகுதிக்கு விஜயம்செய்வதைச் சிறிலங்கா இராணுவத்தினர் தடுத்துள்ளனர். வட பகுதியில் மன்னார்மாவட்டத்தில் வாழும் மக்களின் இன்றைய நிலையையும், இப்பகுதி சிறுவர்களுக்குத் தற்போது ஏற்பட்டிருக்கும் கல்வி பாதிப்புக்களைப்பற்றியதகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் ஜெனிவாவிலிருந்து வருகை தந்த யுனிசெவ் நிறுவனத்தின் அதிகாரிகள் குழு வவுனியாவில் உள்ள சிறிலங்கா இராணுவத்தினரது தடை முகாமைக் கடந்து மன்னாருக்குச் செல்வதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.

கொழும்பிலிருந்து கடந்த 15 ஆம் திகதிகாலை வவுனியா தடை முகாம் பகுதிக்கு வந்து சேர்ந்த இக்குழுவினர் காலை 10 மணியிலிருந்து மாலை 2 மணிவரை தடை முகாமைத் தாண்டிச்செல்வதற்காக் காத்திருந்தனர். எனினும் மேற்படி தடை முகாமைத் தாண்டிச் செல்வதற்குப்படையினர் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

இந்த அதிகாரிகள் குழுவினருக்கு நேற்று மாலைவரை படையினர் அனுமதி வழங்கிய தாகத் தகவல்கள் கிடைக்கவில்லை என்று அங்கிருந்து வரும்தகவல்கள் கூறுகின்றன.

# எங்கும் கூக்குரல் எழுந்தது சிலர் வீதியில் வீழ்ந்து துடித்தனர்

## வற்றாப்பளைச் சம்பவம் பற்றி விபரிப்பு

(அலுவலக நிருபர்)

நாலாபுறமும் மக்கள் சிதறி ஓடிக்கொண்டிருந்தபோது பாரிய வெடிச்சத்தம் கேட்டதும் சிலர் வீதியில் வீழ்ந்து துடிதுடித்தனர். என் உடல் இரத்தத்தால் தோய்ந்தது நானும் நிலத்தில் விழவே என்னையும் மிதித்துக் கொண்டு கூக்குரலிட்டவாறு மக்கள் ஓடினர்.

இவ்வாறு நேற்று முன்தினம் வற்றாப்பளை அம்மன் ஆலய வீதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையில் சிக்கி காலில் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் திருமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கூறினார்.

வற்றாப்பளை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழாவான நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவ எறிகணைக்கு இலக்காகி பதினைந்து பக்தர்கள் பரிதாபமாக உயிரிழந்ததும் இருபத்தைந்துக்கு மேற்பட்டோர் காயமடைந்ததும் தெரிந்ததே.

மேற்படி சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது செஞ்சிலுவைச்சங்க தொண்டர்களும் அந்த கடமையில் ஈடுபட்டிருந்தனர். இச் சங்க டாக்டர் ஒருவர் இது பற்றி விபரிக்கையில்கோவிலின் கடற்கரைப்பக்கமாக மூன்று எறிகணைகள் அடுத்தடுதது வீழ்ந்து வெடித்தன. இதனைத் தொடர்ந்து பக்தர்கள் நாலாபுறமும் சிதறி ஓடித்தமக்குரிய பாதுகாப்புக்களைத் தேடிக் கொண்டிருந்தனர். பரந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

பாதுகாப்பு ஏற்பாடுகள் பலமாக இருக்கும் சென்னையின் புறநகர்ப் பகுதியிலுள்ள பொன்வேலி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்திற்கு இடம் மாற்றப்படவுள்ளது.

மிகவும் கடுமையான பாதுமன்றத்திலேயே தடாசட்டத்தின் கீழும், மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகளுக்காகவும் கைது செய்யப்பட்ட அனைவரும் விசாரிக்கப்படவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இறைச்சியை உடன் விற்பனை செய்ய கோரிக்கை

பழுதடைந்த இறைச்சி வகைகளை உண்பதால் பாவனையாளர்கள் நோய்வாய்ப் படுவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவே இறைச்சிக் கடை உரிமையாளர்கள் அன்றைய தினத்தில் வெட்டிய இறைச்சியை மட்டுமே விற்பனை செய்யும்படி மாநகர சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குளிர்சாதன வசதியற்ற நிலையில் இறைச்சி மற்றும் மீன் போன்ற உணவுப் பொருள்கள் அவை பழுதடைய முன்னரே பாவனையாளர்களுக்கு கிடைக்கச் செய்ய இது உதவும் என்றும் கூறியுள்ள மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பாவனையாளர்கள் இது பற்றி விழிப்பாக இருந்து மாநகராட்சி மன்ற சுகாதார உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## வற்றாப்பளை ஷெல் வீச்சு மேலும் சில விபரங்கள்

(முல்லைத்தீவு)

வற்றாப்பளைஅம்மன் ஆலய பக்தர்கள் மீது முல்லைத்தீவு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது பதினைந்து பேர் பலியாகியதும், இருபத்தைந்திற்கு மேற்பட்டோர் காயமடைந்ததும்தெரிந்ததே.

மேற்படி சம்பவத்தின்போது கொல்லப்பட்டவர்களில் மூவரது பெயர் விபரங்கள் நேற்றைய ஈழநாதத்தில் வெளிவந்தது தெரிந்ததே. மரணமான ஏனைய சிலரது பெயர் விபரங்கள் வருமாறு.

நிமால் (வயது 19, புதுக்குடியிருப்பு), முருகேசு (வயது 56, செம்மலை), க.சிதம்பரநாதன் (வயது 18, முள்ளியவளை), கமலேந்திரன் (வயது 7, புதுக்குடியிருப்பு), வே. ஜெயராசா (வயது14, திருக்கோணமலை), த.சிறிஸ்கந்தராசா (வயது34, புதுக்குடியிருப்பு), சிவம்(வயது 45, கனகராயன் குளம்), கணேஸ் (வயது 30, வற்றாப்பளை), வதனி (முத்தையன் கட்டு).

இச்சம்பவத்தில் காயமடைந்து யாழ்.போதனாவைத்தியசாலை, முள்ளியவளை மற்றும் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப் பட்டுள்ளவர்களில் சிலரது பெயர் விபரம் வருமாறு.

ச. சத்தியசேகர் (16) புதுக்குடியிருப்பு, க. புனிதா (3) புதுக்குடியிருப்பு, கு கணேச சுந்தரவேல் (12) உடையார் கட்டு, சி.சுகந்தினி (17) புதுக்குடியிருப்பு, செ.விமலநாதன் (24) வற்றாப்பளை, உதயகுமாரன் (20) உடையார் கட்டு, கவிதன்(18), வெ.மதிவதனன் (13) தண்ணீரூற்று, வடிவேலு (40), ஞானேஸ்வரன் (21) உடையார்கட்டு, சு. சுகந்தரூபன் (18) புதுக்குடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வரி விளம்பரம்

**மில்க்வைற்**
**ஒலிவ் ஸ்நானப்பவுடர்**

மில்க்வைற் ஒலிவ் ஸ்நானப் பவுடர் இயற்கை வாழ்வுக்கு இயைந்தது. 40 கிறாம் பக்கற் விலை ரூபா 3/-. அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும்
-மில்க்வைற்

[சி/4432]


### ஆட்சிக்கு வந்தால்

# இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் அதன் பின்னரே அபிவிருத்திவேலை

**- லலித் அத்துலத்முதலி**

[கேகாலை]

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே உகந்ததெனப் பலரும் வலியுறுத்தி வந்தபோதிலும் அரசு இதற்கு செவி சாய்த்ததாகத் தெரியவில்லை. நாம் ஆட்சிக்கு வந்தால் முதலில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டபின்னே அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வோம்.

இவ்வாறு எட்டியாந்தோட்டையில் நடைபெற்ற ஜனநாயக ஐக்கிய முன்னணிக் கூட்டத்தில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல் நடத்த முடியாத நிலை இன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது, அன்றைய ஜனாதிபதி நாட்டின் நலன் கருதி இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். அதை அமுல்படுத்த ஏனோ இப்போது முடியவில்லை.

உலகநாடுகள் அபிவிருத்தி வேலைகளுக்கு உதவுவதாகத் தெரியவில்லை. உலக வங்கியின் தாளத்திற்கே அரசு இன்று ஆட்டம் போட்டு வருகிறது எனவும்,

ருவான்விலை கல பிட்டட என்ற இடத்தில் லலித் பேசுகையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இன்று பொம்மைகளாகவே இருக்கின்றனர். அரசாங்கத்தின் குறைகளை அவர்களால் சுட்டிக்காட்ட முடியாதுள்ளது எனவும் தெரிவித்தார்.

### தென்னிலங்கையில்

## பெருமளவு மாணவர்கள் போதைவஸ்துக்கு அடிமை

(கொழும்பு)

தென்னிலங்கையில் போதைவஸ்து பழக்கத்திற்கு அடிமையான மாணவர்களின் தொகை அதிகரித்துச்செல்வதாக புள்ளி விபரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 16 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்களில் 65 சதவீதமானவர்கள் போதைவஸ்துக்களில் பரிச்சயமானவர்கள் என தெரியவந்துள்ளது.

இலங்கையில் உயர்நிலை கல்விகற்கும் மாணவர்களில் ஆறு சதவீதமானவர்களே பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வியைப் பெறமுடிகிறது. ஏனையோர் போதிய தொழில் வாய்ப்புகள் இன்மையால் நடுவில் கைவிடப்படுகின்றனர்.

இவ்வாறு கைவிடப்படுகின்றவர்கள் மேற்குறித்த வயதினராக இருப்பதால் இவர்களே விரைவில் போதைவஸ்துக்களுக்கு அடிமைகளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

### விபசாரத் தொழிலில்

## கொழும்பில் மட்டும் 40,000 பெண்கள்

[கொழும்பு]

கொழும்பு பகுதிக்குள் மாத்திரம் சுமார் 40ஆயிரம் பெண்கள் முழுநேர விபசார தொழிலில் ஈடுபட்டுவருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்ற தகவலை பாலியல் நோய் தடுப்பு இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பொதுசன தொடர்பு சாதன உத்தியோகத்தர்களுக்கென நடத்தப்பட்ட 'எயிட்ஸ்' நோய் தொடர்பான கருத்தரங்கிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

ஹோட்டல்களில் தங்கியிருக்கும் வெளிநாட்டவருக்காக நடமாடும் விபசார விடுதியை நடத்துகின்றனர். குளிரூட்டப்பட்ட பஸ்வண்டியில் இளம் பெண்களை காலிமுகத் திடலுக்கு அழைத்துவந்து அப்பகுதியில் உள்ள உல்லாச பயண ஹோட்டல்களில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றனர் என்று பாலியல் நோய் தடுப்பியக்க அதிகாரி விபரித்தார்.

இதேவேளை தமிழ் நாட்டில் இருந்துவரும் இலங்கை அகதிகளுக்கு 'எயிட்ஸ்' பரிசோதனை நடத்தப்படும்என டாக்டர் காமினி ஜயகுரு தெரிவித்தார்.

### சுதந்திரக் கட்சியினுள்

## வேறுபாடு; பிரச்சினைகள் எதுவும் கிடையாது

**- அனுரா பண்டாரநாயக்கா**

(கேகாலை)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எவ்வித வேறுபாடுகளோ பிரச்சினைகளோ இல்லை. திருமதி பண்டாரநாயக்கா தலைவியாக இருக்கும் வரை எந்தப் பிரச்சினைகளுக்கும் இடம் இருக்காது. சில அரசியல் கட்சிகளே பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றன.

இவ்வாறு குருநாகல் நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் உரையாற்றிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளரான அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

அவர்தொடர்ந்து பேசுகையில் கடந்த 36 வருடகாலமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் எமது கொள்கைகள் காலத்திற்கு ஏற்ப இளம் சமுதாயத்தினரின் அபிலாஷைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ள வேண்டும்.

இன்றைய அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கை காரணமாகவே நாடு இன்று பயங்கரமான சூழ்நிலைக்கு போய்க் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

### மட்டக்களப்பில்

## ஆசிரியர்களுக்கு சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை

(மண்டூர்)

நாட்டில் உள்ள அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் வெசாக் பண்டிகையை முன்னிட்டு கடந்த 14ம் திகதி மே மாத சம்பளம் வழங்கப்பட்ட போதிலும் மட்டக்களப்பு பகு... தாமதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டபோதும் மாகாணசபை அமைப்புமுறை வந்த பின் இவ்விதம் சம்பளம் காலதாமதமாக வருவது இது தான் முதற்தடவையல்ல என்றும் இதற்கு முன்னரும்...


சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம், சாவகச்சேரி.

**வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

(106/8)

சம்பள அளவுத் திட்டம்: 1005 - 1705 / 40 5 - 50 10

(அத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடைய ஆண்பாலார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளுடன் ''பொதுமுகாமையாளர், சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம், சாவகச்சேரி'' என்ற விலாசத்திற்கு 07 - 06 - 92 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ...



## 7ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



**தனபாலசூரியர் றஜந்தன்**
(யா/கனகரத்தினம் ம.வி. மாணவன்)
படைப்பு 22.02.1969 — அழிப்பு 20.05.1985



**தனபாலசூரியர் குழலி**
(யா/கன்னியர்மடம் ம.வி. மாணவி)
படைப்பு 08.04.1972 — அழிப்பு 09.11.1988

எம் இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இல. 5, வேலப்பர் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் கலங்கும்
பெற்றோர், சகோதர சகோதரிகள்,
உறவினர்கள், மாணவ மாணவிகள்,
ஆசிரியர்கள், நண்பர்கள்.

(சி/4430)


## நினைவு கூருகின்றோம்...

## 1992-05-20

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ **எஸ். மயில்வாகனன்** (புலிபாய்ந்தகல், கிரான், மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய - முன்னாள் மன்னார் மாவட்டத் தளபதியும், யாழ் மாவட்டத் தளபதியுமான -

**லெப். கேணல் ராதா** (கனகசபாபதி ஹரிச்சந்திரா - ஹரிச்சந்திரா வீதி, வண்ணார்பண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்)

வளலாயில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். கோணேஸ்** (இரத்தினம் தவராசா - நாவற்காடு, அச்சுவேலி தெற்கு)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, வந்தாறுமூலைப் பகுதியில், இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய -

**பைரவன்** (இளையதம்பி கதிரவன் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

வல்வெட்டித்துறை / மானாங்கானை, ஊறணிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ஆம் லெப். ஜீவா** (தம்பிராசா சத்தியமூர்த்தி - பத்திரகாளி கோவிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை)

**ஜெயம்** (துரைசிங்கம் சிறிதரன் - மானாங்கானை, வல்வெட்டித்துறை)

இதே சம்பவத்தின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

மாத சம்பளம் வழங்கப்பட்ட போதிலும் மட்டக்களப்பு பகுதியில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு அச் சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடகிழக்கு மாகாண சபைக்கு பணம் கிடைக்காததினாலேயே ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் கால என்றும் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறு நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

சம்பளப்பணத்தைப் பெறுவதற்காக வடகிழக்கு மாகாண சபைக்கு கல்வி அதிகாரிகள் நேற்று முன்தினம் சென்றதாக கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்

## வருட இறுதிவரை பிரான்சு அணு ஆயுத சோதனைகளில் ஈடுபட மாட்டாது

இந்த வருடம் அணுவாயுத சோதனை எதிலும் பிரான்சு இனிமேல் ஈடுபடாது என அந்நாட்டின் பிரதமர் தேசியசபையில் உரையாற்றும் போது தெரிவித்ததாக கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

பிரான்சின் தேசிய சபையில் பிரதமர் உரை நிகழ்த்துகையில் அணுவாயுத முயற்சிகளை பிரான்ஸ் கைவிடாது. இது அதனுடைய கொள்கையின் ஒரு முக்கியமான அம்சமாகும். ஆனால் சமமான அணுவாயுத குறைப்பு மேற்கொள்ளப்படுவதனை தொடர்ந்துவலியுறுத்துவோம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் பசிபிக் பகுதியில் மேற்கொள்ளப்படும் அணுவாயுத பரிசோதனைகளை இந்த வருடம் நிறுத்தி வைக்குமாறு ஜனாதிபதி வழங்கிய பணிப்பின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இப்பகுதியில் இப்போது முதல் இவ்வருட இறுதிக்குள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுமென்று பிரான்ஸ் நம்புவதாகவும் தனது உரையில் குறிப்பிட்டார்.

## தமிழ் மொழி போதிப்பதில் பலமும் பலவீனமும்

பாடசாலைகளில்தமிழ் மொழி கற்பிப்பதில் பலமும்பலவீனமும்என்றதலைப்பில் ஆய்வு ஒன்று நடாத்தப் படஉள்ளது. இந்த ஆய்வில் முன்னோடி நடவடிக்கையாக தேசிய கல்வி நிறுவனத்தில் சகல மாவட்டங்களையும் சேர்ந்த தமிழ் மொழிசேவைப் பயிற்சி ஆலோசகர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டு அவர்களுக்கு ஆய்வு வினாக்கொத்துக்களும் வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இத்தரவுகளில் அடிப்படையில் தமிழ் மொழி கற்பித்தலின் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுக்கத்திட்டமிட்டுள்ளது என்று கல்வி உயர்கல்வி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

---

முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் சங்கக் காரியாலயத்தில் பார்வையிடலாம்.

கல்வித் தகைமைகள்: 1.

கூட்டுறவுப் பணியாளரின் 9 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

11. வர்த்தக/ தொழிற்துறை ஸ்தாபனம் ஒன்றின் முகாமை மட்டத்திலான பதவியும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டதாரி.

அல்லது

111 கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர்தரம்) க.பொ.த (உயர்தரம்) 3 பாடங்களிலான சித்தியுடன் சந்தைப்படுத்தல்/ வழங்கல்/ பொருள் விநியோகம் பொருட்களின் இறக்குமதி/ ஏற்றுமதி என்ற துறைகளில் வர்த்தக/ தொழில்துறை ஸ்தாபனம் ஒன்றின் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2. வயது : 23 - 40

3. நிபந்தனைகள்

அ) விண்ணப்பதாரர் 2 வருடத்துக்கு மேல் யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல்வேண்டும்

ஆ) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இ) ஆங்கிலம் அல்லது சிங்களம் பேச, எழுத, வாசிக்க தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

ஈ) சங்கத்தால் நிர்ணயிக்கப்படும் பிணைப்பணம் செலுத்த தயாராக இருத்தல் வேண்டும் (ரொக்கம், ஆதனம்)

உ) தெரிவு செய்யப்படுபவர் தொடர்ந்து மூன்று வருட காலத்தில் கடமை புரிவதற்காக சம்பந்த பத்திரத்தில் கையொப்பமிடல் வேண்டும்.

ஊ) விண்ணப்பப்படிவத்துடன் கல்விச்சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், வதிவிட அத்தாட்சிப்பத்திரம், பிறப்புச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியனவற்றின் பிரதி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி.ப நோ.கூ சங்கம்,
சாவகச்சேரி.

17-5-92
(சி/4431)

---

வீரச்சாவெய்திய

**கப்டன் ரமேஸ் மாஸ்ரர்** (பொன்னையா சிவானந்தசுந்தரம் - நவிண்டில் வீதி, ொலிகண்டி, வல்வெட்டித்துறை)

இதே சம்பவத்தின்போது இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பெண்

1989 ஆம் ஆண்டு மன்னார் முள்ளிக்குளம் பகுதியில், தேசவிரோத சக்திகளின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய

**கப்டன் அமலன்** (அலோசியஸ் அமலதாஸ் - காத்தான்குளம், மன்னார்)

**கப்டன் குலம்** (பொன்னுத்துரை யோகராசா (ரவி) - செல்வபுரம், பூநகரி, மன்னார்)

**கப்டன் புதுமை** (பே. வரதகுமார் - வாமதேவபுரம், அடம்பன், மன்னார்)

**கப்டன் சபேசன்** (சீமான் இமானுவேல் இராசரட்ணம் - பரியாரிகண்டல், முருங்கன், மன்னார்)

**லெப். நாயுடு** (க. ஜெயசீலன் - பள்ளக்கமம், முருங்கன், மன்னார்)

**லெப் கர்ணன்** (கிட்ணன் சிவகுமார் - நல்லூர், பூநகரி. மன்னார்)

**லெப். மாக்ஸ்** (பத்மநாபன் சசிக்குமார் - தட்சணாமருதமடு, மன்னார்)

**2 ஆம் லெப். சிவம்** (ஆபிரகாம் முருகையா - கள்ளிமோட்டை, முருங்கன், மன்னார்)

**வீமன்** (பிலிப் றோச்நிரஞ்சன் - சாவற்காடு, மன்னார்)

**பீற்றர்** (செபஸ்தியாம்பிள்ளை சகாயராசா - கருங்கண்டல், அடம்பன், மன்னார்)

**லெப். சுரேஸ்** (சண்முகம் சத்தியசுரேஸ் - கலாசாலைவீதி. திருநெல்வேலிவடக்கு)

சுதுமலையில், இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**செந்தில்** (டொமினிக் - புங்குடுதீவு)

இதே பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

திருக்கோணமலை நிலாவெளிப் பகுதியில் கோயில் திருவிழாவில் கலந்துகொண்டோர் மீது தேசவிரோதிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு / படுவான்கரை, திருப்பழுகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு அவ்விடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டோராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4434)

## சிந்தனைக்கு

தான் விரும்புவது போல், தான் வாழ்வதல்ல சுயநலம்; தான் விரும்புவது போல் மற்றவர்களை வாழச் சொல்வதுதான் சுயநலம்.

- ஆஸ்க்கார் ஒயில்ட்

ஈழநாதம்

61, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 20-05-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 66

# பிரேமதாசா அரசுக்கு இந்தியாவால் நெருக்கடி

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்தியா விதித்துள்ள தடையானது சிறிலங்கா அரசாங்கத்திற்கு பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்கியுள்ளது இத்தடையானது உடனடியாக விடுதலைப்புலிகள் மீது ஏற்படுத்தியுள்ள அழுத்தத்தைவிட சிறிலங்கா அரசாங்கத்தின் மீது ஏற்படுத்தியுள்ள அழுத்தமே அதிகமானதாகும்.

விடுதலைப் புலிகள் மீது தடை விதித்த இந்தியா சிறிலங்கா அரசாங்கம் யதார்த்தத்தை உணர்ந்து செயற்படவேண்டும் என வற்புறுத்தியுள்ளது. அதாவது, இந்தியா விடுதலைப் புலிகள் மீது விதித்த தடையைக் கருத்திற்கொண்டு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தையைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் மறைமுக அழுத்தமாகும். அதாவது. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் ஒடுக்க வேண்டும் என சிறிலங்கா அரசாங்கத்தை இந்தியா வற்புறுத்துகின்ற அதேவேளை, தேவை ஏற்படின் உதவத்தயாராக இருப்பதாகவும் இந்தியா மறைமுக சமிக்ஞைகளை அனுப்புகின்றது.

இந்தியாவின் இந்நிலைப்பாடு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவையும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் ஒரு நடவடிக்கை என்று குறிப்பிடினும் மிகையாகாது. திரு. பிரேமதாசா நீண்டகாலமாகவே இந்திய எதிர்ப்புவாதத்தில் முன்னிற்பவர். இந்தியா - சிறிலங்கா ஒப்பந்தத்தை தூக்கிக் குப்பையில் போட்டுவிட்டு இந்திய இராணுவத்தை இலங்கையைவிட்டு வெளியேறிவிடுமாறு கோரியவர். எப்பொழுதும், இந்தியாவை அனுசரித்து, மதித்து நடத்த வேண்டும் என்ற நோக்கம் அற்றவர். இலங்கையின் எந்த விவகாரத்திலும் இந்தியாவின் தலையீட்டை வன்மையாக எதிர்ப்பவர். இந்நிலையிலேயே பிரேமதாசாவை வஞ்சம் தீர்ப்பதிலும், சிறிலங்காவில் இந்தியாவிற்கு ஆதரவான ஆட்சியொன்று உருவாக்குவதிலும் அல்லது குழப்பமான நிலை ஒன்று ஏற்படுத்துவதிலும் இந்தியா பெரும் அக்கறை கொண்டுள்ளது.

இதேவேளை, சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா என்றுமில்லாதவாறு அரசியல், பொருளாதார நெருக்கடியில் உள்ளார். தென்னிலங்கையில். நிலவும் வேலையில்லாப் பிரச்சினை விலைவாசி ஏற்றம் போன்றவை அரசாங்கம் மீது மக்களை வெறுப்படையச்செய்துள்ளது. மேலும் பல்கலைக்கழகங்களின் மாணவர் போராட்டங்களும், தீவிரவாத பௌத்த பேரினவாத சக்திகளின் வளர்ச்சியும், அவர்களுக்கு கிடைத்து வரும் ஆதரவும் அரசாங்கத்தை மேலும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

இதேவேளை நாட்டில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக ஏற்பட்ட பெருந் கோட்டத் துறையின் உற்பத்தி வீழ்ச்சியும், லட்சக்கணக்கான அகதிகளைப் பராமரிக்க வேண்டிய பெரும் சுமையும் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியையும் அர

## திருமலையில் புலிகளின் தாக்குதல்கள்

# சிறிலங்கா இராணுவத்தின் பிரச்சினை அடிப்படையையே தகர்த்தெறிந்தது

கடந்த பெப்ரவரி 21 ஆம் தேதி பத்தாம் கட்டைக்கும் வேப்பங்குளத்துக்குமிடையில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 23 விமானப் படையினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அதிர்ச்சியடைந்த இராணுவம் பரவலாகத் தேடுதல் வேட்டையில் இறங்கியது. அவசரமாக இராணுவம் ஆங்காங்கே குவிக்கப்பட்டது என்றார் திருக்கோணமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தென்னவன்.

தொடர்ந்து அவர் -

பெப்ரவரி 21 ஆம் தேதி புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் பாதுகாப்புப்படைகளில் மன உறுதி தளர்ந்திருந்தது. இடைப்பட்ட காலத்தில் திருக்கோணமலை மாவட்டத்தில் புலிகள் முற்று முழுதாகப் பலவீனம் அடைந்து விட்டதாகப் பொய்யான பிரசாரம் செய்து கொண்டிருந்தது இராணுவம்.

இதே சமயம், இந்தப் பிரசாரத்தில் அடிப்படையையே தகர்த்தெறிந்து விட்டது எம்மவர்கள் சிறிலங்கா இராணுவத்தின் மீது மேற்கொண்ட தாக்குதல்கள்,

மூதூரில் ஏகப்பட்ட இடங்களில் பெரியபாலம், 64 ஆம் கட்டை, பச்சனூர், பள்ளிக்குடியிருப்பு, மூதூர் ஜி பி.எஸ், கட்டைப் பறிச்சான் முகாம்களில் நிலைகொண்டிருந்த இராணுவம்சுற்றியிருந்த பகுதிகளில் படுதீவிரமாகத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது.

இந்த நிலையில் மூதூர்-மட்டக்களப்பு வீதியில் பெரிய பாலத்திற்கும் பச்சனூருக்குமிடையில் தினமும் ரோந்து செய்து கொண்டிருந்த இராணுவத்தில் எல்லா அம்சங்களையும் கவனித்துக் கொண்டு கடந்த ஏப்ரல் மாதம் 10 ஆம் தேதி காலை 7. 30 மணியளவில் நடையாக வந்த இருபது இராணுவத்தினர் மீது இடைமறித்துப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ணுவத்தின் உற்சாகத்தைப் பாதிக்கும் என்பதாக உணர்ந்திருந்தோம். நாம் தாக்குதல் மேற்கொண்ட இடத்தின் தரைத்தோற்றமும் எதிரிக்குச் சாதகமானது மூதூரில் கங்கைத்துறையில் கடலோடு சங்கமிக்கும் மகாவலி ஆற்றைக் கடந்து தாக்குதல் நடந்த அந்த இடத்தைஅணுக வேண்டும். வெட்டையான இடம் என்று கூறியதோடு, எமது போராளிகளில் போர்த் தந்திரோபாயமும், உறுதியும் வென்றன என்றார்.

இந்தத் தாக்குதலினால் அதிர்ச்சியடைந்த இராணுவத்தினர் முகாம்களை விட்டு வெளியேறி பக்கத்தில் முஸ்லிம் வீடுகளில் பதுங்கிக்கொண்டனர். பலமணி நேரங்களுக்குப் பிறகு மீண்டும் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டு இராணுவத்தின் முகாம்களுக்கு திரும்பினர் என்றார் அவர்.

தொடர்ந்தாற்போல் மே 9 ஆம் திகதி மற்றொரு தாக்குதல் சிறிலங்கா இராணுவத்தின்மேல் நடாத்தப்பட்டது. மல்லிகைத் தீவில் சுற்றிவர வயல்பிரதேசம், ரோந்துவந்த ஜீப் வண்டிமீது கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இராணுவம் இந்தத் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. இந்தத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியானவர்கள் என்று அரசே ஏற்றுக்கொண்டது.

இந்தத் தாக்குதல்களினால் படைகளின் இராணுவத் தைரியம் பலவீனப்பட்டதோடு அது அடைந்த இழப்பும், சேர்ந்து இராணுவத்தின் அணுகுமுறை வழக்கம்போல் மக்களுக்கு எதிரான போக்காக மாறியது. குறிப்பாக ஏப்ரல் 10 ஆம் தேதித் தாக்குதலுக்குப் பிறகு புலிகளை இராணுவ ரீதியாகச் சந்திக்கத் தயங்கிய இராணுவம் மக்களை மிரட்டத் தொடங்கியது. பட்ட காலிலே படும் என்பதுபோல் மக்கள் கஷ்டப்

> திருக்கோணமலை மாவட்டம் இப்பொழுது சிங்களக் குடியேற்றத்தின் களமாக இருந்து வருகிறது. இனவாதம் என்பதன் மறுபெயர் தான் இந்தக் குடியேற்றங்கள். அரசு இப்போது அதன் உத்திகளை மாற்றி வருகிறது.

அரிசி ஒவ்வொன்றும் 1/2கிலோ தான் வாங்கலாம் என்று இராணுவமே ஒரு சட்டத்தைச் செயற்படுத்தியது. இந்தச் செயல்களெல்லாம் சூடைக்குடா, கூனித்தீவு, சம்பூர், பாட்டாளிபுரம், இலக்கந்தை, கொக்கட்டி ஆகிய தமிழ்க் கிராம மக்களுக்கு எதிராக முடுக்கி விடப்பட்ட அராஜகங்கள்தான். இதையெல்லாம் அனுபவிக்கும் அதே நேரத்தில் பத்து மைல் தூரம் மக்கள் கால்நடையாக வந்து பொருள்களைத் தலைச் சுமையாகக் கொண்டு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம்.

- இப்படிச் சொன்னார் தென்னவன்.

### திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம்

அரசு சிங்களவர்களைத் தூண்டி விட்டுக் காணிகளைப் பிடித்துத் தாறுமாறாகக் குடியேற்றங்களை அமைக்கும் பணியை ஏலவே ஆரம்பித்தது. 1983 க்குப் பிறகு அரசு குடியேற்றங்களை அமைப்பது பல வழிகளாலும் தீவிரமாக்கப்பட்டது. பல ஆண்டு காலமாக நடைபெறும் இந்தச் சிங்களக் குடியேற்றங்கள் இன்று பகிரங்கமாகவே நடைபெறுகின்றன.

திருக்கோணமலை மாவட்டம் இப்பொழுது குடியேற்றத்தின் களமாக இருந்து வருகிறது இனவாதம் என்பதன் மறுபெயர்தான் இந்தக் குடியேற்றங்கள். ஆனால், அரசு இப்போது தன் உத்திகளை மாற்றி வருகிறது.

'மீளபிவிருத்திமுக்கோணம்' [ Redevelopment Triangle ] என்ற பெயரில் ஒரு நகரக் குடியேற்றத் திட்டத்தை அரசு முடுக்கி விட்டது. நகர அபிவிருத்தி அதிகாரசபை இது நாள்வரை இதற்கான வரைபடம், வடிவமைப்பு இத்தியாதி பூர்வாங்க வேலைகளை முடித்துள்ளது.

உப்புவெளியில். திருக்கோணமலை நுழைவாயிலில் ஆரம்பித்து லவ்லேன் புகையிரத நிலையம் வரை விஸ்தாரமாகி, நகரின் கிழக்கில் கடற்கரை ஓரம் வரையிலான நிலப்பரப்பை உள்ளடக்கியது இத்திட்டம். இந்தப் பாரிய திட்டத்துக்குப் பின்னணி என்ன என்றுதான் தமிழ் மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். இத்திட்டத்தில் சிங்களவரைக்

கும் குடியேற்றங்களிலிருந்து அரசின் இன விரோதப் போக்கு அம்பலத்துக்கு வருகிறது.

அல்லை - கந்தளாய் வீதியில் சூரியபுர குடியேற்றம்மற்றும் கண்டி வீதியில்கந்தளாய்க்கும் அலுத்ஓயாவுக்குமிடையில் அமைநத குடியேற்றம், திருக்கோணமலை - கண்டி வீதியில் பாலம்போட்டாற்றுக்கும் தம்பலகாமச் சந்திக்குமிடையிலும், திருக்கோணமலை-அநுராதபுர வீதியில் கித்துலூத்திலும், கொழும்பு - கண்டி வீதி 4 ஆம் கட்டை ஆண்டான் குளக் குடியேற்றங்களிலும் 100 சத விகிதம் சிங்களவரே குடியேற்றப் பட்டுள்ளார்கள்.

இந்தக் குடியேற்றங்கள் தமிழர்களைப் புறக்கணித்து விட்டன. குடியேற்றங்கள் அமைந்துள்ள இடங்கள் தமிழர் பிரதேசம் என்பதை அரச ஆவணங்கள் மூடி மறைத்து விட்டன.



> திருக்கோணமலை மாவட்ட அரசியல் நிர்வாக பொறுப்பாளர் தென்னவன்(ரூபன்) வழங்கிய செவ்வி.
>
> தொகுப்பு:- மதன்

திருக்கோணமலைப் புறநகர்ப் பகுதிகளின் நிலை இதுஎன்றால், திருக்கோணமலை நகர சபை எல்லைக்குள் நிலை என்ன?

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு உத்தியோகத்தர்களின் குடியிருப்புக்களை லிங்க நகரில் ஒரு பகுதி நிலம் ஒதுக்

களின் அனுசரணையில் 30 சிங்களக் குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

மற்றும்படி சிறிலங்கா இராணுவத்தின் ''அனுசரணை''யிலும் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. இராணுவ அதிகாரிகள் தலையிட்டு திருக்கோணமலை - கொழும்பு வீதியில் வன பரிபாலன இலாகாத் தேக்கங் காடுகளை அழித்துச் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கும் பணிகள் தொடர்கின்றன. வீடுகளைக் கட்டிக் கொடுத்து சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவதில் இராணுவம் கவனமெடுக்கிறது.

எமது தாக்குதலுக்கு இலக்காகி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் லக்கி விஜயரெட்ணா இராணுவத் தலைமைச் செயலகத்தின் பிரதிநிதி மாத்திரமல்ல அவர் தன்னிச்சையாகக் குடியேற்றத் திட்டங்களை வகுத்துக் கொண்டு குடியேற்றங்களை ஆரம்பித்த ஒரு குடியேற்றவாதி. இராணுவத்தின் கண்காணிப்பில் குடியேற்றங்களை அமைத்த முதல் இராணுவ அதிகாரியானஇவரின்பணியை இவரின் மரணத்திற்குப்பிறகு சகபாடிகளான இராணுவ அதிகாரிகள் தொடர்கின்றனர். இராணுவம் மேற்கொள்ளும் இக் குடியேற்றங்களுக்கு சர்வோதயம் ஆரியரெத்தினா, திருக்கோணமலை அரசாங்க அதிபர் ஆகியோரின் பக்கபலமும் உண்டு.

மூதூர் 59-ஆம் கட்டை, கிளிவெட்டி, தம்பலகாமச் சந்தி, 11-ஆம் கட்டை ஆகிய தமிழ்க் கிராமங்களில் இராணுவ முகாம்களுக்கு அருகாமையிலும் உள்ளும் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன திட்டமிட்டு தமிழரின் கலையும், கலாசாரமும், கருவழிக்கப்படுகின்றன.

மேலும் பாலம்போட்டாறு

பராமரிக்க வேண்டிய பெரும் சுமையும் நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடியையும் அரசாங்கத்திற்குத் தோற்றுவித்துள்ளது அத்தோடு இலங்கையில் அரசாங்கம் மேற்கொண்ட மனித உரிமைமீறல்கள் காரணமாக சிறிலங்கா எதிர்பார்த்த நிதி உதவிகளும் காலக்கிரமத்தில் கைக்கு வந்து சேராததினால் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களும் முடங்கிப் போயுள்ளன.

இவ்வாறாக பெரும் அரசியல் பொருளாதார நெருக்கடியில் பிரேமதாசா அரசாங்கம் சிக்கியுள்ள இதேவேளையில் வடக்குகிழக்கில்புலிகளுக்குஎதிரான போரிலும் இராணுவ வெற்றியை ஈட்ட முடியவில்லை. இராணுவம் புலிகளுடனான மோதலில் தொடர்ந்து வரும் இழப்பால் மனோபலம் இழந்த நிலையில் உள்ளது. அத்தோடு, இராணுவக் கட்டமைப்பில் அதிகாரிகள் மட்டத்திலுள்ள கருத்து மோதல்கள் இராணுவ வெற்றி என்பது எட்டமுடியாத ஒன்று என்பதை அரசாங்கத்திற்கு உணர்த்தியது.

இவ்வாறான நெருக்கடிகளின் காரணமாக சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு தவிர்க்கமுடியாது ஓர் அரசியல் தீர்வுகுறித்துச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளது அரசியல் தீர்வு குறித்த நகர்ச்சி இல்லாமல் அரசாங்கத்தை நடத்திச் செல்வது கடினமான காரியமாக இருந்த இவ்வேளையிலேயே இந்தியா விடுதலைப் புலிகளின் மீது தடைவிதித்துள்ளது. சிறிலங்கா அரசாங்கத்தைச் சிந்தித்துச் செயற்படுமாறு வற்புறுத்துகின்றது.

இதன் மூலம் இந்தியா சிறிலங்கா அரசாங்கத்திற்கு பெரும் முட்டுக்கட்டை ஒன்றைப் போட்டுள்ளது. இத்தடை மூலம் திரு. பிரேமதாசா அரசாங்கத்தின் அரசியல் நகர்ச்சிக்கு இருந்த ஒரேஒரு வழியையும் இந்தியா அடைத்துள்ளது. இதன் மூலம் வெற்றிபெற முடியாத போர் ஒன்றை நடத்துமாறு சிறிலங்கா அரசாங்கத்தை இந்தியா வற்புறுத்துகின்றது. இதன் மூலம் பிரேமதாசா அரசாங்கத்தை மேலும் ஆட்டம் காணவைத்து நெருக்கடியில் சிக்கித் திணறவைக்க இந்தியா எண்ணுகின்றது.

இதேவேளை தென்னிலங்கையில் இன்றுள்ள அரசியல், பொருளாதார நெருக்கடிகளே பிரேமதாசா அரசாங்கத்தைக் குலைத்துவிடப் போதுமானதாகும், இம்முறை கொழும்பில் நடந்த எதிர்க்கட்சிகளின் மே தினப் பேரணிகளில் பெருமளவில் மக்கள் கலந்து கொண்டமை பிரேமதாசா அரசாங்கம் மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பைக் காட்டுவதாக இருந்ததென அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் இப்பேரணிகள் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மையை வெளிக்காட்டியதையும் விமர்சகர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இந்நிலையில் இந்தியா விதித்துள்ள தடையானது பேரினவாத சக்திகளை மேலும்பலப்படுத்தி, பிரேமதாசா அரசாங்கத்திற்கு மேலும், நெருக்கடிகளைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. அத்துடன் இனப்படுகொலைகளை பேரினவாத சக்திகள் மேலும் அதிகரிக்க வாய்ப்பு அளிக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இராணுவத்தினர் மீது இடைமறித்துப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. பதினான்கு இராணுவத்தினர் களத்திலேயே கொல்லப்பட்டனர். ஆறு இராணுவத்தினர் பின்னர் மருத்துவமனையில் காலமானார்கள். இந்ததாக்குதலில் எமது தரப்பில் ஒருவருக்கேனும் சிறு காயம் தானும் ஏற்படவில்லை.

இந்த இடத்தில், இந்தத் தாக்குதலை நாம் நடத்தியதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட சூழலில் ஆறுமுகாம்கள் இருந்ததாகும், தாக்குதல் நடந்த இடத்துக் கருகில் 64 ஆம் கட்டை பெரியபாலம் இராணுவ முகாம், பச்சனூர் அடுத்த முகாம். இவ்வாறு இராணுவத்தின் கோட்டைக்குள் புகுந்து தாக்குவது இராணுவத்தினர் மக்களை மிரட்டத் தொடங்கியது பட்ட காலிலே படும் என்பதுபோல் மக்கள் கஷ்டப்பட்டார்கள்.

அரசு உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்குத் தடையில்லை என்று காட்டிக்கொள்கிறது. அரசு பெயருக்கு அல்லது பெயரளவில் வழங்கும் உணவைக் கூட மக்கள் கைக்குப் போக விடாமல் தடுக்கும் தந்திரத்தை இராணுவம் கையாண்டது. தாக்குதல் நடந்த மறுநாள் காலை நடைமுறைக்கு மாறாகத் திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாத்திரம் மக்கள் பொருள்களை வாங்கலாம் என்று இராணுவம் சட்டம் போட்டது. அதுவும் ஏலவே வழங்கிய அளவைக் குறைத்து சீனி, மா, என்றுதான் தமிழ் மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். இத்திட்டத்தில் சிங்களவரைக் குடியேற்றுவதற்கான துரோகத்தனமான எண்ணத்துடன் அரசு செயற்படுகிறது.

இப் புதுநரத் திட்டத்தில் வியாபார மையம், ஏனைய பக்க வசதிகளுடன் கூடிய 1000 வீடுகள், விளையாட்டு மைதானம், தொழில் பேட்டை ஆகியன அமைய உள்ளன.

தமிழர்களுக்கு இழைக்கப்படும்அநீதிகள் மத்தியில் மிகச் சிக்கலான சிங்கள இராணுவச் சூழ்நிலையில் இது தமிழர் குடியமர்வதற்கு உகந்த திட்டமல்ல எனத் தமிழ் மக்கள் அஞ்சுகிறார்கள்.

அரசு திருக்கோணமலை மாவட்டத்தில் அமைத்திருக்கும் வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு உத்தியோகத்தர்களின் குடியிருப்புக்களை லிங்கநகரில் ஒரு பகுதி நிலம் ஒதுக்கப்பட்டது. மிகவும் துரோகத்தனமான முறையில் இராணுவப் பயிற்சிக்கென இந்தஇடம் சுவீகரிக்கப்பட்டுள்ளது. பாலையூற்றில் 75 வீடுகளும், மட்கோ சாகர கிராமத்தில் 75 வீடுகளும் கட்டப்படுகின்றன. இந்த வீடுகள் மூன்று சமூகத்தினருக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்று அரசு தரப்பில் சொல்லப்படுகிறது. இந்தப் பீதியூட்டும் சூழலில் வாழ தமிழ் மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். தமது பாதுகாப்பு பற்றி மக்கள் சந்தேகம் தெரிவிக்கிறார்கள். இப்போது வவ்லேனில் மகாமாயபுரக் குடியேற்றத்தில் பௌத்த பிக்குரின் கலையும், கலாசாரமும், கருவழிக்கப்படுகின்றன.

மேலும் பாலம்போட்டாறு தம்பலகாமச் சந்திக்கிடையிலு தமிழரின் பேர்மிட் காணிகள் உள்ள இடம் புலிகளின் வழிப் போக்கு என்ற சாக்குப் போக்கில் இராணுவத்தால் பறிக்கப்பட்டு சிங்களவருக்குக் கையளிக்கப்படுகின்றன. சூடக்குடா முதல் வெருகல் முகத்துவாரம் வரை மூதூர்க் கிராமங்களிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் அகதிகளாக வாழ்கிறார்கள். சுகாதாரம் போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என்று சொல்லி முடித்தார் திருமலை மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தென்னவன் (ரூபன்).

# அணிசேரா நாடுகளின் செல்வாக்கு குறையவில்லை

## - இந்திய வெளியுறவு இணையமைச்சர்

(டில்லி)

கிழக்கு-மேற்கு வல்லரசு முரண்பாடு இன்று இல்லாது ஒழிந்தபோதிலும் அணிசேரா இயக்கம் மேற்கொண்டும் ஒரு வலுவான அமைப்பாக விளங்கப்போவதாக இந்திய வெளியுறவு இணையமைச்சர் எட்வேர்ட் கொலாய்ரோ தெரிவித்தார்.

இந்தோனிஸியா பாலியில் அணிசேரா நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு நாடு திரும்பிய அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அணிசேரா நாடுகள் அமைப்பின் செல்வாக்கு குறைந்துவிட்டதாக மாநாட்டில்யாரும் கருதவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த ஆண்டு செப்டம்பரில் நடக்கவிருக்கும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டிற்காக அணிசேரா நாடுகளின் தலைவர்கள் கூடும்போது மூன்றாவது உலகநாடுகளின் கடன் நிலை, பொருளாதார மற்றும் அரசியல் சுதந்திரம் இவை பற்றிச் சில கூட்டான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

மத்திய கிழக்கு அமைதித் தீர்வு, ஐ. நா. வின் அரங்கள் பலப்படுத்தப்படல் இது பற்றியும் அணித் தலைவர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள்.

வளர்ச்சியடைந்துவரும் உள்நாட்டு அலுவல்களில் மற்றவர்கள் தலையிட முனைவது அபாயகரமானது என்று அணிசேராநாடுகள் கருதுவதாக அமைச்சர் கூறினார்.

# வெடிகுண்டுகளைகண்டறிய நாய்கள் பயன்படுத்தப்படும்

(சென்னை)

சென்னை உட்பட அனைத்து விமான நிலையங்களிலும் வெடிகுண்டுகள் வைக்கப்படுவதைக் கண்டு பிடிப்பதற்காக விசேட மோப்ப நாய்களைப் பணியில் அமர்த்துவது என்று விமானப் பாதுகாப்புத் துறையினர் முடிவு செய்துள்ளனர். சிறீநகர் மற்றும் பம்பாய் விமான நிலையங்களில் தற்போதும் இதுபோன்ற பணியில் நாய்கள் ஈடுபடுத்தப்படுவது தெரிந்ததே.

# லிபியத் தூதுவரகத்தில் பணியாளரைக் குறைக்கவும்

## - இந்தியா கோரிக்கை

(டில்லி)

டில்லியிலுள்ள தமது தூதரகத்தில் உத்தியோகத்தர்களைக் குறைத்துக் கொள்ளும்படி இந்திய அரசு லிபியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. லொக்கர் பீ விமானக் குண்டுவெடிப்பு விவகாரம் தொடர்பாக ஐ நா. சபையின் தீர்மானத்திற்கேற்ப இந்தக் கோரிக்கை விடப்படுவதாக வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். டில்லியிலுள்ள லிபியத் தூதுவரகத்தில் தற்சமயம் கடமையாற்றும் பதினொரு ராஜியப் பிரதிநிதிகளில் இருவர் வெகு விரைவிலேயே நாடு திரும்பவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெயலலிதாகூற்றுதவறான தகவல் அடிப்படையிலானது

வி பீ சிங் பதவி வகித்த காலத்தில் இருந்த மத்திய அரசு விவசாயிகளின் கடன்களை ரத்துச் செய்வதாக அறிவித்தது வெறும் கண்துடைப்பு என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியது. தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. என்று மாநில உணவுத்துறை அமைச்சர் ஜி. விஸ்வநாதன் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் அறிக்கையொன்றைவெளியிட்ட விஸ்வநாதன் மேலும் முதல்வருக்கு தவறான தகவல்களை வழங்கிய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஈழநாதம்

# பிரச்சினையை இந்தியா எவ்வாறு தீர்க்கப்போகிறது

## -கருணாநிதி

(சென்னை)
இந்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்ததன் பின்னர் எவ்வாறு இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கப் போகிறது என்பது தமக்கு வியப்பை ஏற்படுத்தியிருப்பதாக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி தெரிவித்திருக்கிறார்,

கடந்த வெள்ளிக்கிழமை அவர் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார். இவ் அறிக்கையில் மேலும் அவர் தெரிவிக்கும்போது; தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் எவரும் இல்லாமல் ஒழிக்கப் படுவர் என்ற சட்டப் பேரவையில் ஆளுநர் உரையாற்றி இருக்கிறார். இவ்வாறு நாட்டில் இல்லாத ஒரு இயக்கத்தை எவ்வாறு தடை செய்ய முடியும் என்பதையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்தியாவில்

# மனித உரிமை மீறல் கட்டுப்படுத்த குழு

(சென்னை)
இந்தியாவில் மனித உரிமைகள் மீறும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த மத்திய அரசு ஆணைக்குழு ஒன்றை அமைக்கவுள்ளது.

திருவனந்தபுரத்தில் நேற்றுச் செய்தியாவர் மத்தியில் பேசிய உள்துறை இணை அமைச்சர் எம். எம். யேக்கப் மனிதஉரிமைகள் ஆணைக்குழு அமைப்பு குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் இதற்கான மசோதாலோக்சபாவில் அடுத்த கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும் எனவும் கூறினார்.

விடுதலைப் புலிகள் பற்றிக் கூறிய அவர் அந்த அமைப்பின் மீதான தடையை அமுல்படுத்தப்பட்டதா எனவிசாரணை மன்றம் ஒன்று அமைக்கப்படும் என்றும் கூறினார். நாட்டில் இலங்கைஅகதிகளின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சொன்னார்.

இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல்;

# அணு ஆயுத கிளப்பில் உறுப்பினராக்க வேண்டும்

அணு ஆயுத பரவல் தடுப்பு உடன்பாட்டை இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் முன் வரும் பட்சத்தில் அவற்றை அணு ஆயுத கிளப்பில் உறுப்பினர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்று இந்தியாவிற்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ராபர்ட்புகின் கூறியுள்ளார்.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டுமென்பதற்காக இந்தியாவிற்கான நிதி உதவி மற்றும் வர்த்தக தொடர்புகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று நியூயோர்க் டைம்ஸ் நாளேடு யோசனை கூறியுள்ளதை கண்டனம் செய்துள்ளஅவர் இந்த மூன்று நாடுகளையும் அணு ஆயுத கிளப்பில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதுதான் மிகவும் விவேகமான கொள்கையாக இருக்கும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கியூபாவிற்கு

# பத்தாயிரம் தொன் அரிசி இந்தியா விற்பனை

(டில்லி)
இந்தியா பத்தாயிரம்தொன் அரிசியைக் கியூபாவிற்கு விற்க முடிவு மேற்கொண்டுள்ளது. ஓராண்டு கடன் வசதியுடன் தாமதித்துப் பணம் செலுத்தும் அடிப்படையில் கியூபாவிற்கு அரிசி விற்கப்படுவதாக டில்லியில் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

கியூபாவிற்கு அரிசி விற்கப்படக்கூடாது என்று அமெரிக்கா நிர்ப்பந்தம் மேற்கொண்டதா எனச் செய்தியாளர் கேட்டதற்குப் பதிலளித்த அவ்வதிகாரி இந்த விஷயத்தில் எந்த வெளிநாட்டு நிர்ப்பந்தமும் இந்தியாவின்முடிவை மாற்ற இயலாது என்று மத்திய அமைச்சர் சிதம்பரம் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டினார்.

# வெப்பத்தால் ஒருவர் பலி

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் வெப்பம் அதிகரித்துள்ளமையால் ஒருவர் உயிரிழந்துள்ளார் அம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் சராசரியாக 44 பாகை செல்சியஸ் வெப்பநிலை காணப்படுகிறது இன்னமும் இருபத்து நான்கு மணி நேரத்திற்கு இவ் வெப்பநிலை நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது.

விண்வெளி தொழில் நுட்பம்

# மாதாந்தக் கலந்துரையாடல்

[பருத்தித்துறை]
நிதர்சனம், புலிகளின் குரல் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பான மாதாந்தக் கலந்துரையாடல் இன்று 20-ம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென வடமராட்சி நிதர்சனம் பொறுப்பாளர் திரு. நகுலன் அறிவித்துள்ளார். இக் கலந்துரையாடல் ஏற்கனவே நாளை 21ஆம் திகதி நடைபெறலாமென அறிவிக்கப் பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. [25]

# லெப். கேணல் ராதாவின் நினைவு நாள்

லெப் கேணல் ராதா அவர்களின் 5-ம் ஆண்டு நினைவஞ்சலியும் முள்ளிக்குளம் 'புளொட்' தேசத்துரோகிகள் முகாம் மீது நடாத்திய தாக்குதலின் [illegible] வீரமரணமடைந்த பதினொரு வீரவேங்கைகளின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலியும் இன்று மன்னார் மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் கொண்டாடப்பட உள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட துணை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் தமிழ்மாறன் மேற்கொண்டு வருகிறார்.

# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)
யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இடம்பெற்ற ஆட்டத்தில்சுன்னாகம் ஸ்கந்தா அணி வெற்றிபெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தா அணி அதனை எதிர்த்து மோதிய விநாயகர் விளையாட்டுக்கழக அணியை 1-0 என்ற கோல்கணக்கில் வெற்றி ஈட்டியது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இன்னொரு போட்டியில் ஸ்கந்தவரோதயா அணியை பாஷையூர் சென். அந்தனீஸ் அணி 4-2 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது. (42

# இன்றைய போட்டிகள்

திருமலை நட்சத்திர விளையாட்டுக்கழக ஓராண்டு நிறைவை முன்னிட்டு யாழ் பல்தொழில் நுட்பக் கல்லூரி

# பாடசாலையில் பொலிஸ்; மாணவர் பெரும் அவதி

[மட்டக்களப்பு]
வீரமுனைக் கிராமத்தில் உள்ள பாடசாலைக் கட்டடத்தில் சிறிலங்கா பொலிசார் நிலை கொண்டிருப்பதினால், மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வீரமுனைக் கிராமத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட 150 குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகளே இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களாகும்.

இதேவேளை வீரமுனையைச் சேர்ந்த 372 குடும்பங்கள் இன்னமும் திருக்கோவில், காரைதீவு, கல்முனை போன்ற இடங்களில் உள்ள அகதி முகாம்களிலேயே சுமார் இரு வருடங்கள் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டுறவு கிராமிய வங்கி கணக்கியல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)
மக்கள் வங்கியின் யாழ். பிராந்தியத்திய அலுவலகமும், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் திணைக்களமும் இணைந்து குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் அனுசரணையுடன் கூட்டுறவு கிராமிய வங்கிக்கணக்கியல் பயிற்சி நெறி ஒன்றை நடாத்த உள்ளன,

எதிர் வரும் 22, 23 ஆம் திகதிகளில் மருதானா மடத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் இப் பயிற்சிநெறி நடாத்தப்பட உள்ளது. காலை 8. 30 மணிமுதல் மாலை 4. 30 மணி வரை நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக்கணக்காளர்கள், வங்கிச்சேவை முகாமையாளர்கள், கிராமிய வங்கி முகாமையாளர்கள், கிராமிய வங்கி லிகிதர்கள், காசாளர்கள், ஆகியோர் கலந்து கொள்வார்கள். மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் திரு. ஆர். அருளானந்தம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ்.லிங்கநாதன் விவசாயக்கல்லூரி அதிபர் திரு. இ. குகதாசன் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க இப்பயிற்சிவகுப்பு ஆங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளது. (க)

# கஷ்டநிவாரண ஆபத்துப்படி உடன் வழங்க வேண்டும்

## - தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

[வவுனியா]
வழங்கப்படாது இருக்கும் கஷ்ட நிவாரண ஆபத்துப்படியினை வழங்க நடவடிக்கை எடுக்கவும் என இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க வவுனியா மாவட்டப் பிரதிநிதிகளான கே. சிவஞானம், என். சந்திரசேகரம்பிள்ளை ஆகியோர் ஜனாதிபதி செயலக இடம்பெயர் சேவையின்போது வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ். ஜிரசேனா அவர்களிடம் மகஜரைக் கையளித்து நிலைமையினை விளக்கியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் ஒரு பகுதி ஆசிரியர்களுக்கு மட்டுமே ஆபத்து ஊக்குவிப்புப்படி வழங்கப்பட்டுள்ளது.

நிதி பற்றாக்குறையால் மிகுதியானவர்களுக்கு வழங்கப்படவில்லை என அறியப்படுகிறது எனவே கூடுதலான நிதியை வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு ஒதுக்கி விரைவில் குறிப்பிட்ட படிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளனர்.

எங்கும்

வெளியாக இருந்தமையால் அத்தனை பெருந்தொகை பக்தர்களால் தங்கியிருக்க முடியவில்லை எனவேஅவர்கள் கால் போனபோக்கில் வானத்தைப் பார்த்தபடி அடுத்த எறிகணை எங்கே விழுமோ என்ற பயத்தில் ஓடிக்கொண்டிருந்தனர். பெரும்பாலானோர் கைக் குழந்தைகளை ஏந்தியவாறும் சிறுவர்களை கையில் பிடித்துக் கொண்டு கூக்குரலிட்டபடி ஓடிக்கொண்டிருந்தனர். இச்சன நெரிசலின்போது தவறி வீழ்ந்த சிலர் காயமடைந்தனர்.

இவர்களுக்கு ஓர் ஒதுக்குப்புறத்தில் வைத்து முதலுதவி சிகிச்சை அளிக்கும் பணியில் பொதுத்தொண்டர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அவ்வேளையே எமக்கு மிக சமீபமாக சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திற்கு அருகில் திடீரென ஓர் எறிகணை வீழ்ந்து வெடித்தது.

கண்ணை மூடி முழிப்பதற்குள் பலர் சிதறிக்கிடப்பதையும், சிறுவர்கள் குழந்தைகள் உட்பட பலர் துடிதுடித்துக் கொண்டிருப்பதைக்கண்டேன் அறு பேர் வரையில் அடை

# ஆஸ்பத்திரி ஊழியருக்கு தரம் குறைந்த உணவு

(யாழ்ப்பாணம்)
யாழ் போதனா வைத்திய சாலை ஊழியர்களுக்கு வழங்கப்படும் உணவு தரம் குறைந்ததாக இருப்பதுடன் சுகாதார திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்ட அட்டவணையின் பிரகாரம் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

கடந்த சில மாதங்களாக நிறை உணவான மீன், முட்டை, கருவாடு ஆகியன வழங்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது இவர்களுக்கு சுகாதார திணைக்கள சிபாரிசின்படி ஞாயிறு - மீன், திங்கள் மரக்கறி, செவ்வாய்-கருவாடு, புதன் - இறைச்சி, வியாழன் முட்டை, வெள்ளி, சனி - மரக்கறி என வழங்கப்படல் வேண்டும்.

ஆனால் தற்போது வாரம் முழுவதும் மரக்கறி வகைகளே வழங்கப்படுவதாகவும் தரம் குறைந்த அரிசியையும் இவர்கள் வழங்குவதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

ஏறினேன்.

சில வினாடிகளுக்குள் பலத்த வெடிச்சத்தம் கேட்டது. எனது கணவருக்கோ பிள்ளைகளுக்கோ என்ன நடந்ததென்றே தெரியாது நான் அவர்களை விட்டுப் பிரிந்து விட்டேன் எனது நெஞ்சாலும் இடுப்பினாலும் இரத்தம் பீறிட்டது. என்னால் எழுந்திருக்க முடியவில்லை. என் மேலால் சனங்கள்ஏறி மிதித்துக் கொண்டு ஓடினார்கள்; அதன்பின் என்ன நடந்ததென்று தெரியாது நான் கண் விழித்த போது ஆஸ்பத்திரியில் கிடப்பதை உணர்ந்தேன். கணவர் பிள்ளைக

# லெப். ஆதவன் ஞாபகார்த்த உதைபந்தாட்ட போட்டி

கியூபாவிற்கு அரசு விஜயம் ...

## விண்வெளி தொழில் நுட்பம்

# இந்தியாவுடன் ஒப்பந்தம்; நிறைவேற்றமொஸ்கோ உறுதி

(மொஸ்கோ)

இந்தியாவுக்கு விண்வெளி தொழில் நுட்பத்தை வழங்குதவற்கு ரஷ்சிய விண்வெளி நிறுவனம் கையெழுத்திட்டுள்ள 25 கோடி டாலர் ஒப்பந்தத்தைமொஸ்கோ நிறைவேற்றும். இதனை அதிகாரபூர்வ ரஷ்சிய செய்தி நிறுவனத்திற்கு ரஷ்சிய வெளிநாட்டு வர்த்தகதுறை முதலாவது துணை அமைச்சர் அளித்த பேட்டியில் மேற்கண்ட உறுதிமொழியை அளித்துள்ளார்

இந்தியாவிற்கு ராக்கெட் தொழில் நுட்பத்தை அளிக்கும் ஒப்பந்தத்தை சுதந்திரமாக தொழிற் பாம் நிறுவனம் ஒன்று செயற் படுத்துவதை தடை செய்ய ரஷ்சிய அரசிற்கு உரிமை இல்லை என்று அவர் தெரிவித்தார்.

அந்த நிறுவனம் ஏவுகணை தொழில் நுட்பத்தை விற்பனை செய்யும் ஒப்பந்தத்தை மீறி விட்டது என்று கூற எந்த விதத்திலும் ஆதாரம் எதுவுமில்லை என்று அவர் தெரிவித்தார்.

இந்தியாவிற்கு விண்வெளி தொழில் நுட்பத்தை விற்பனை செய்வதையிட்டு ரஷ்சியாவுக்கு எதிராக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளபொருளாதார தடை எந்தவிதத்திலும் ஏற்கக் கூடியதல்ல என்று அவர் தெரிவித்தார்.

### பேச்சுவார்த்தைக்

யிட்ட கூற்றை குறிப்பிட்டுக் காட்டி, இத்தகைய சிந்தனையோட்டம் இந்திய வெளி விவகார அமைச்சில் இருந்து வருகிறதென்பதை இங்குள்ள வெளிவிவகார கொள்கை வகுப்பாளர்கள் கருத்தில் எடுக்க வேண்டும் எனவும் இப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

### மன்னாரில்

நோய் மிகமோசமாக பரவியுள்ள பேசாலை அகதிமுகாமில் தடுப்பு நடவடிக்கைஎதுவும் எடுக்கப்படவில்லை மேலும் பல தமிழ்க் குழந்தைகள் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சென்னை-கொழும்பு

# போதைவஸ்து கடத்தலில் 3 கொழும்பு வர்த்தகர்கள்

(கொழும்பு)

கொழும்புக்கும் சென்னைக்குமிடையில் பெருமளவில் ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்படுவதைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். இந்தக் கடத்தல் சில காலமாக நடைபெற்று வருவதாகத் தெரிய வருகிறது.

கொழும்பிலுள்ள மூன்று வர்த்தகர்கள் இந்தக் கடத்தலில் சம்பந்தப்பட்டுள்ளனர். சென்னைக்கும், கொழும்புக்குமிடையில் ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்துவதற்கு அவர்கள் பெண்களைப் பயன்படுத்தி வருவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

சென்னை விமான நிலையத்திலிருந்து கட்டுநாயக்காவுக்குத் திரும்பி வந்த ஒரு பெண்ணைப் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பகுதியினர் சமீபத்தில் கைது செய்தனர் இவரிடம் 5 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினிருந்தது.

இப் பெண்ணை விசாரித்த போது போதைப் பொருள்களைக் கடத்துவதற்காக கொழும்பிலுள்ள வர்த்தகர் அவருக்குப் பணம் கொடுத்ததாகத் தெரிய வருகிறது.

இந்த மூன்று சந்தேக நபர்களான வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து சென்னைக்குச் சென்றனர். ஆனால் இன்னும் அவர்கள் திரும்பி வரவில்லை என்று பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவருகிறது.

### வற்றாப்பளை

பிருப்பு, ச.நித்தியராசா(17) புதுக்குடியிருப்பு, ம. எட்மன் றெஜித் (27) சாவகச்சேரி, ஈஸ்வரன் (21) மூத்தையன் கட்டு, விஜயரட்ணம் (17) மாங்குளம், அண்ணை (84), சிவகணேசன்(35), இந்திராணி (17). (ச, க)

யாட்டுக்கழக ஓராண்டு நிறைவை முன்னிட்டு யாழ் பல்தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றுவட்டப் போட்டி இன்று ஆரம்பமாக உள்ளது.

இன்றைய போட்டியில் மாலை 3.30 மணிக்கு ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கணேசன் 'ஏ'விளையாட்டுக்கழகமும், 4.30 மணிக்கு பல்கலைக்கழக ஏ அணியை எதிர்த்து ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

''கஸ்தூரியின் ஆக்கங்கள்'' நூல் வெளியீட்டு விழா 22-05-92 மாலை 5.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யும், சிறுவர்கள் குழந்தைகள் உட்பட பலர் துடிதுடித்துக் கொண்டிருப்பதைக்கண்டேன் ஆறு பேர் வரையில் அடையாளம் காணமுடியாதளவிற்குச் சிதறிக் கிடந்தனர். காயமடைந்துஉயிருக்காக போராடிக்கொண்டிருந்தவர்கள், சிதறிக் கிடந்தவர்கள் ஆகியோருக்கு மேலால் பக்தர்கள் ஏறி மிதித்துக்கொண்டு அலறியவாறு ஓடிக்கொண்டிருந்தனர் இதனால் காயமடைந்தவர்களைஉடனடியாக காப்பாற்ற முடியவில்லை.

சற்றுநேரத்தில் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் பயப்பீதியுடன் அங்கு நின்றவர்கள் காயமடைந்தவர்களைத் தூக்கிப் பாதுகாப்பானஇடங்களுக்குக் கொண்டுசென்றனர்.

இச்சம்பவத்தில் எமதுசெஞ்சிலுவைச்சங்க உறுப்பினர் ஒருவர் பலியானார். இருவர்காயமடைந்தனர். எமது வாகனம் சேதமடைந்தது. பலத்த சிரமத்திற்குமத்தியில் காயமடைந்தவர்கள் வாகனங்களின் உதவியுடன் புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டு முதலுதவிச்சிகிச்சையளிக்கப்பட்ட பின் வாகனங்கள்மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர் என்றார்.

மேற்படி சம்பவத்தில் படுகாயமடைந்த சிவநேசம் என்பவர் கூறுகையில் வெடிச் சத்தம் கேட்கத் தொடங்கியதும் நானும் எனது கணவரும் கைக்குழந்தை உட்பட இரு பிள்ளைகளையும் தூக்கிகொண்டு ஓடி வந்தோம். சைக்கில் பாதுகாப்பு நிலையத்தில் விட்டிருந்த சைக்கிளை ஒவ்வொருவரும் முட்டி மோதி அவசரப்பட்டு எடுத்து கொண்டிருந்தனர். எனது கணவரும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஒருவாறு சைக்கிளை எடுத்து வந்தார் கணவர் சைக்கிளில் ஏறியதும் மூத்த மகள் இந்துசா முன்னே ஏற நான் எனது இரண்டு வயது மகளைத் தூக்கிக் கொண்டு பின்புறத்தே

கண் விழித்த போது ஆஸ்பத்திரியில் கிடப்பதை உணர்ந்தேன். கணவர் பிள்ளைகளைக் கேட்ட போது சுகமாக இருப்பதாகக் கூறினார்கள் என்றார்.

மேற்படி சம்பவத்தில் சிக்கி இவரது கணவர் ச. நவரட்ணம் ஸ்தலத்திலேயே பலியானதும் இளைய மகள் யுவராஜினி (2) வைத்தியசாலைக்கு எடுத்து வரப்படும் போது வழியில் பலியானதும் மகள் இந்துசா (6) வலது கையை இழந்ததுடன் இடுப்பிலும் பலத்தகாயத்துடன்யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதும் தெரிந்தே, (ச)

## உதைபந்தாட்ட போட்டி

லெப்டினன்ட்ஆதவன் ஞாபகார்த்தமாக வட அல்வை நக்கீரன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி (7 பேர் கொண்டது) நக்கீரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இவ் வீரவேங்கை லெப்டினன்ட்ஆதவன்ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வடமராட்சியிலுள்ள 34 விளையாட்டுக் கழகங்கள் இப்போட்டியில் பங்குபற்றுகின்றன. (25)

## மரண அறிவித்தல்

### திரு. சின்னப்பா சபாரத்தினம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு சின்னப்பா சபாரத்தினம் சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ் சென்றவர்களான திரு. திருமதி சின்னப்பா சின்னத்தங்கம் தம்பதிகளின் அருமை மகனும், இராசம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சாரதாதேவி இராமச்சந்திரன், திருமதி பத்மலோசனாதேவி சிவகுரு, இரங்கநாதன் (UK), கமலநாதன் (UK), சிவராசா (அரச. நில அளவையாளர் கிளிநொச்சி) திருமதி இந்திராதேவி சர்வேஸ்வரன், சிறிதரன் (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திரு. இராமச்சந்திரன் (கச்சேரி பென்சன் கிளை, யாழ்ப்பாணம்). திரு. சிவகுரு (UK), திருமதி ஜானகி இரங்கநாதன் (UK), திருமதி சாந்தினி கமலநாதன் (UK) திருமதி வசந்தி சிவராஜா, திரு. S. சர்வேஸ்வரன் (அரச நில அளவையாளர் மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், சயந்தன், சவிதா, கல்பனா, சாரிநிதா, சிவதர்சன், டிலேஸ், சர்மிளா, நித்திகா, ரஜீவ், றனுஜா, கிரிஷானி, சிறீகஜன், சஞ்ஜீவ் ஆகியோரின் அன்புமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி செல்லையா ஆச்சிமுத்து தம்பதிகளின் அருமை மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

''பதிமமகால்''
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

[2583]

தகவல்:
ச. சிவராஜா
(மகன்)